RAFFLES INSTITUTION
2017 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

**தமிழ் மொழி, இலக்கியம்** **9567/1**
தாள் 1 (பகுதி 2)

**TAMIL LANGUAGE AND LITERATURE** **19 Sep 2017**
**Paper 1 (Part 2)**

**2 hours 15 minutes**
Additional Materials: Answer Paper (Total time for Part 1 and Part 2)

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 முதல் பகுதியின் முகப்பு அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்

இவ்வினாத்தாள் 4 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது

## **‘அ’ பிரிவு**

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

வாழ்க்கையில் நெருக்கடிகள் நேர்வது(Q1)______________. அப்போது தான் அறிவும் திறனும் பயன்பட வேண்டும். நெருக்கடி நேரும்போது எப்படி நடந்து கொள்வது என்று தெரியாததும் குறை தான். (Q2)______________ முதன்மையாதோ அதைப் போற்றி மற்றவற்றைக் கைவிடத் தெரியாததும் குறை தான். இதே போல் தேர்வுக்குப் படிக்கும் மாணவன், தேர்வு நேரத்தில் பாட நூல்கள் முதன்மையானவை என்று உணர்ந்து மற்றவற்றைக் கைவிடத் துணியாவிட்டால் பயன் என்ன?

காந்தியடிகள் எவ்வளவு பெரிய போராட்டம், எத்தனை முறை நடத்தியிருக்கிறார். (Q3)______________அதற்கு இணை இல்லை. ஆயினும் எவ்வளவு தெளிவும் துணிவும் அவருக்கு இருந்தன. சத்தியத்திற்காகவும், அகிம்சைக்காகவும் நாட்டின் விடுதலையையும் பொருட் படுத்தாது இருந்தார். நாட்டின் விடுதலை என்று வந்தபோது தம் அமைதியையும் குடும்ப நன்மையையும் கைவிடத் துணிந்தார். இப்படி எத்தனையோ(Q4)______________ கண்டு, உடனுக்குடன் துணிந்து செயலாற்றிய வீரர் அவர்.

குடும்பத்திலுள்ளோர் இந்தத் தெளிவையும் துணிவையும் பெற்றுவிட்டால், ஒருவர் மற்றவருக்காகத் தியாகம் செய்யும் கலை இயல்பாக அமைந்து விடும். அப்போது வெளியுலகம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. வெளியுலகம் அவர்களை (Q5)______________ என்று வெறுக்காது. வெறுக்கவும் முடியாது.

## <u>‘ஆ’பிரிவு</u>

**<u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (1)** **(30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப்பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, கேட்கப்படும் வினாக்களுக்கு உமது சொந்த நடையில் விடை எழுதுக.**

நெறிமுறைகள் என்பன ஒரு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பின்பற்றப்படும் நன்னடத்தை முறைகளாகும். உதாரணமாக நீதி, நியாயம், நேர்மை ஆகியனவற்றைக் கூறலாம். நெறிமுறைகள் பொதுவாகவே வாழ்வில் ஒருவருடைய நன்னடத்தைக்குத் தோற்றுவாய்களாக விளங்கக்கூடியவை. ஆனாலும் ஒருவர் நல்ல நடத்தையுள்ளவர் என்பதால் அவர் நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாழ்கிறார் என்று கூறி விட முடியாது. வெவ்வேறு சமூகங்கள் வெவ்வேறு விதமான நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாழ்கின்றன. ஒரு சமூகத்திற்குச் சரியெனப்பட்டது மற்றொரு சமூகத்திற்கு ஏற்புடையதாகாது. கடந்த காலங்களில் சந்திக்காத ஒரு புதிய சவாலாக ஓரின சமூகத்தில் வாழ்ந்திருந்த மனிதர்கள் அனைவரும் இன்று பன்முகமான சமூகங்களில் வசிக்கின்றோம். ஒரே இனமாக ஒரேவிதமான நெறிமுறைகளுக்கிணங்க வாழ்ந்த சமூகங்கள் ஒன்றுகலந்து இன்று **<u>ஒருமுகப்படுத்தப்பட</u>**வேண்டிய நெறிமுறைகளுக்கிணங்க வாழ வேண்டியுள்ளது

எல்லாம் கலந்து ஒரே நாடாக கட்சியளிக்கும் இவ்வுலகில் எனது உனது என்று நாம் நெறிமுறைகளை வைத்துக் கொண்டிருக்க முடியாது. எல்லா மக்களையும் இனங்களையும் உள்ளடக்கக்கூடிய நெறிகளை நாம் கடைப்பிடித்தாக வேண்டும். எல்லோரையும் சமமாக மதிப்பதும் ஒரு நன்னடத்தையே. அப்படிச் சமமாக மதிக்கவேண்டுமானால் சமமான நடத்தை முறைகள் வேண்டும். அதாவது இவ்வுலகில் வாழ்வதற்கு நமக்கு உடலும் அதைச் சேர்ந்த **<u>அவயங்களும்</u>** மிகவும் அவசியம். கைகால்கள் இல்லையெனில் வாழ்க்கை பெரிதும் துன்பமாகிவிடும். நிறைய காரியங்களை நம்மால் செய்ய இயலாது போகும். அதே போல் அடுத்த உலகங்களில் நாம் வாழப்போகும் வாழ்க்கைக்கு இவ்வுலகிற்குத் தேவைப்படும் கைகால்கள் போன்றுள்ள வேறு பல ஆற்றல்கள் அவசியமாகின்றன. அச்சக்திகள் இல்லாமல் அவ்வுல வாழ்க்கை நரகமாகிவிடும்.

நித்தியமான அவ்வுலக வாழ்வு அநித்தியமான இவ்வுலகில் நாம் கடைபிடிக்கப்போகும் நெறிமுறைகளையே பெரிதும் நம்பியுள்ளது. ஆக இவ்விஷயமே நம்மை ஓர் ஒழுங்குடனான வாழ்க்கை வாழ்வதற்குத் **<u>தூண்டுகோலாக</u>** இருக்கவேண்டும். பொதுவாக எல்லாருமே நெறிமுறைகள் குறித்து ஓரளவிற்கு அறிந்து வைத்திருப்பார்கள். தெரியாது என யாருமே கூற முடியாது. அப்படித் தெரியாவிட்டாலும் பாதகமில்லை,

வாழ்க்கையின் நோக்கம் அறிந்து அதற்குகந்த நன்னடத்தையுடன் வாழ வேண்டும் எனும் ஆழமான அவா மனதில் பதிந்திருக்கவேண்டும். இது முதல் படியாகும். அதாவது மனத் தூய்மையோடு ஒரு காரியத்தில் இறங்குவதாகும் . நெறிமுறைகளின் மதிப்பு பிறவிப் பயனை அடைவதிலேயே இருக்கின்றது. நெறிமுறைகள் இல்லாமல் வாழ்வின் உண்மையான



நோக்கம் நிறைவேறாது. அடுத்து,'அரைக்க அரைக்க அம்மியும் நகரும்' என்பார்கள். அதே போல் நமது பழக்க வழக்கங்களையும் சிறுகச் சிறுகவே மாற்றிக்கொள்ள முடியும். ஒரேயடியாக மாற்ற முடியாது. பழக்கங்கள் தாமாக மாறாது. அதற்கு முயற்சியும் தியாகம் செய்யும் குணமும் தேவை. இதில் விடாப்பிடியாக இருந்தோமானால் காலப்போக்கில் நிச்சயமாக வெற்றி காணலாம். ராபர்ட் புரூஸ், சிலந்தியை வழிகாட்டியாகக் கொண்டே எதிரியை விரட்டியடித்து, வரலாற்றில் முதல் இடத்தைப் பெற்றான். இப் பேரரசன் 16 முறை போர் தொடுத்து போரில் வென்றானாம்.அவனது புகழுக்கு சிலந்தியே காரணம். அதற்கு முயற்சியும் தியாகம் செய்யும் குணமும் தேவை. இதில் விடாப்பிடியாக இருந்தோமானால் காலப்போக்கில் நிச்சயமாக வெற்றி காணலாம். எதிலுமே நாம் கற்கும் மனப்பான்மையைப் பின்பற்ற வேண்டும்.

**வினாக்கள்**

Q6 'நெறிமுறைகள் என்றால் என்ன' என்பதை முதல் பத்தியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (6 மதிப்பெண்கள்)

Q7 நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் உள்ள சிக்கல்கள் யாவை? (6 மதிப்பெண்கள்)

Q8 நெறிமுறைகளுக்கு இணங்க வாழ்வதற்கான ஊக்கம் பெற என்ன செய்ய வேண்டும்? (6 மதிப்பெண்கள்)

Q9 'சிலந்தியைப் போல' எவ்வாறு நெறிமுறைகளின் சவால்களை வெற்றி கொள்வது என்று கட்டுரையாசிரியர் விளக்குகிறார்? (6 மதிப்பெண்கள்)

Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ ஒருமுகப்படுத்தப்பட

ஆ அவயங்களும்

இ தூண்டுகோலாக

**முற்றும்**